Lakeridge Health

மார்ச்சு 26, 2020

அன்பார்ந்த டூறாம் பிரதேசத்து நண்பர்கள் மற்றும் அயலிடப் பெருமக்களுக்கு,

உலகளாவிய அளவில் இன்று பரவி நிற்கும் கோவிட்-19/ COVID-19 பெரும்புல நோய்(pandemic) எமது வாழ்வில் இதுவரை நாம் சந்தித்து இருக்காத ஒரு நிலைமையை எம்முன் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது. இதன் தாக்கத்தை ஒவ்வொரு நாளும் எங்களில் ஒவ்வொருவரும் உணர்ந்து வருகிறோம்.

எதிர்ப்பாடுகளை நாங்கள் எதிர்நோக்கும் இச்சந்தர்ப்பத்திலும், வழமை போல எமது நோயாளர்கள், எங்கள் சேவைப் பணிக் குழுவினர் மற்றும் டூறாம் பிரதேச சமூகத்தினர் ஆகியோரின் பாதுகாப்பு எமது மிகப் பிரதான விடயமாக உள்ளது என்று லேக்றிட்ஜ் ஹெல்த் சேவையினராகிய நாம் கருதுகிறோம்.

எமது சேவை ஸ்தலங்களில் மிகச்சிறந்த பராமரிப்பை வழங்கி எல்லோரையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக அயராது மிகத்திறமையாக உழைத்து வரும் எமது சேவைப் பணியாளர்களுக்கு ஆதரவாகத் திரண்டு வந்த எமது சமூகத்தின் மிகப்பல அங்கத்தவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியை நாம் தெரிவிக்கிறோம்.

கோவிட்-19 நோயினால் பீடிக்கப்பட்டு உள்ள மக்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டு செல்லும் இந்த நேரத்தில், லேக்றிட்ஜ் ஹெல்த் ஆரோக்கிய சேவை அமைப்பு எமது சமூகத்தில் அதிகரித்து வரும் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கைக்கு எதிர்வினையாக புதிய நடவடிக்கைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. முன்னேற்பாடாக திட்டம் இடுவதற்கும் இந் நடவடிக்கைகள் உதவியாக உள்ளன. நாம் எழுதி இருந்த மார்ச்சு 18 ஆம் திகதிக் கடிதத்தில் நாங்கள் எடுத்து இருந்த சில கஷ்டமான, ஆனாலும் அவசியமான, தீர்மானங்களை உங்களுடன் பகிர்ந்து இருந்தோம். நோயாளர்களையும் சிகிச்சைக் குழு அங்கத்தவர்களையும் பாதுகாப்பதற்கும், எமது சேவைகள் தேவைப்படுவோராக உள்ள, தீவிர சுகவீனமுற்ற நோயாளர்கள் மற்றும் வலுக்குறைந்த சமூகத்தினருக்கு பராமரிப்பு வழங்குவதற்குமாக, இத் தீர்மானங்களை நாம் எடுத்திருந்தோம்.

இன்று அதன் தொடர்ச்சியாக, நோயாளர்களும் எமது சிகிச்சைக் குழு அங்கத்தவர்களும் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்யவும், விரைவாக மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப நுண்ணிய முறையில் சாதகமாக நிறுவனம் மாறுவதை முன்விழிப்புடன் ஆதரிக்கவும் என்று நாம் முடிவு எடுத்துள்ள இன்னும் சில நடைமுறைகள் பற்றி உங்களுடன் தகவல் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

**எமது உபயோகப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை கவனமாகக் கையாளுதல்**
புதிதாக வந்துள்ள வைரஸ் கிருமியுடன் நடக்கும் போராட்டத்துக்கு தேவையாக உள்ள குறிப்பிட்ட சில தனிமனித பாதுகாப்பு உபகரணங்களை (personal protective equipment / PPE) பெறுவதற்கு இன்றைய நிலையில் உலகம் முழுவதிலும் தட்டுப்பாடு நிலவுகிறது. ஒன்ராறியோ அடங்கிலும் உள்ள வைத்திய சாலைகளைப் போன்று லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பும் இத் தட்டுப்பாட்டின் தாக்கத்துக்கு உட்பட்டு உள்ளது. இதற்குப் பதில் நடவடிக்கையாக, சிகிச்சைக்கான உபயோகப் பொருட்களை சிக்கனமாகக் கையாளும் நோக்கத்துடனும் டூறாம் பிரதேசத்தில் வைத்திய சாலை ஒன்றில்அனுமதிக்கப்பட்டு கோவிட்-19 நோய்க்கான சிகிச்சை தேவைப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற ஒரு நிலையில் தயாராக இருக்க ஆயத்தம் செய்வதற்குமாக, பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம்.

நாங்கள் வழக்கமாக PPE வகை உபகரணங்கள் வாங்கும் வியாபார வழிகள் மூலம் இவற்றைப் பெறுவதற்கு தீவிரமாக ஈடுபட்டு வரும் அதே நேரத்தில், வேறு  புதுவிதமான பொருள் வாங்கும் யுக்தி முறைகளையும் கையாண்டு வருகிறோம்.

நாங்கள் எமது பிரதம பராமரிப்பு வைத்தியர், பங்காளர்கள் மற்றும் பல் வைத்தியர்கள் போன்ற பிற ஆரோக்கிய பராமரிப்பு வழங்குவோர் ஆகியோரிடம் இருந்தும், உள்ளூர் வியாபார நிலையங்களில் இருந்தும் சத்திர சிகிச்சைக்கான முகக்கவசங்கள் போன்ற மேலதிக PPE வகை உபகரணங்களை பெறுவதற்கு முயன்று வருகிறோம். **இம்முயற்சியில் எமக்குக் கிடைத்த நல்ல பலன் ஆச்சரியம் ஊட்டுகிறது**. எமது நண்பர்கள், கூடிப் பணியாற்றுவோர் மற்றும் உள்ளூர் வியாபார நிலையங்களைச் சேர்ந்தவர்கள் பல முக்கிய பொருட்களை நன்கொடையாக வழங்கியும், கொண்டு வந்து தந்தும், கொடுத்தும் உள்ளனர். இப்பொருட்களில் முகக் கவசங்கள், கையுறைகள், முகக் கேடயங்கள் மற்றும் கோவிட்-19 சோதனைக்கான பஞ்சுமுனைகள் போன்றவை அடங்கி இருந்தன .

எமது சிகிச்சைக் குழுவினரும் தமது பாதுகாப்புக்கோ அல்லது மற்றவர்களின் பாதுகாப்புக்கோ தீங்கு ஏற்படாத முறையில், PPE உபயோகப்பொருட்களை சேமிப்பதில் கவனம் செலுத்தி வருகின்றனர். நாங்கள் எல்லோருமே எமது உபயோகப் பொருட்களை கவனமாகவும் அதி கூடிய நன்மை பெறும் விதத்திலும் பயன்படுத்துவதில் விசேட கவனம் செலுத்துகிறோம்.

**தற்காலிகமாக சத்திரசிகிச்சைகளைப் பின்போடுதல் மற்றும் வெளிப்புற நோயாளர் சேவைகளைக் குறைத்தல்**
கடந்த வாரம் **PPE**  வகை உபகரணங்களைச் சேமிக்க வேண்டிய தேவையின் காரணமாக, அவசர கால நிலையற்ற சத்திரசிகிச்சைகள் யாவற்றையும் பிற சிகிச்சை நிலையச் சேவைகளையும் நாங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தோம். இது மனக்கஷ்டமான ஒரு முடிவாக இருந்தது என்ற போதிலும், ஒன்ராறியோ வைத்தியசாலைகளுக்கு ஆரோக்கிய சேவைகள் அமைச்சர் கூறியிருந்த விதப்புரைகளுக்கு இசைவாகவே அமைந்தது.

வேறு GTA பிரதேச வைத்தியசாலைகளில் நடப்பன போன்று நாங்களும் தொடர்ந்து உயிர், உடல் ஆபத்துச் சத்திர சிகிச்சைகளை தொடர்ந்து மக்களுக்கு வழங்கி வருகிறோம். அவசரகால நிலையற்ற புற்றுநோய் சத்திரசிகிச்சைகள் மற்றும் வேறு உயர் முக்கியத்துவம் வாய்ந்த சிகிச்சைச் செயற்பாடுகளை, பாதுகாப்பாக நாம் அவற்றை செய்யும் ஒரு நிலைமைக்குத் திரும்பிய பின், செய்வதற்கு முடியும்.


இந்த நிலைமை பற்றி அடுத்த வாரம் புதிதான செய்தியை உங்களுக்குத் தருவோம் என்று உறுதி கூறுகிறோம். எந்த ஒரு சத்திரசிகிச்சையை அல்லது மருத்துவச் செயல்முறையைப் பின்போடுவதாயினும் அது நோயாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் வேதனை தரும் ஒன்றாக இருக்கும் என்பதை நாம் அறிவோம்.

**டுறாம் பிரதேசத்துக்கான மருத்துவ கணிப்பீட்டு நிலையங்களை விரிவுபடுத்தல்**
இந்த வாரம் நாங்கள் ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலையில் கோவிட்-19 மருத்துவ கணிப்பீட்டு நிலையம் ஒன்றினைத் திறக்கவுள்ளோம். ஒஷாவா நகரில் திறக்கப்பட்ட முதலாவது மருத்துவ கணிப்பீட்டு நிலையத்துக்கு அடுத்ததாக இது திறக்கப்படுகிறது. இம்மாதத்தின் ஆரம்பத்தில் ஒஷாவா நிலையம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2712 நபர்கள் கணிப்பீட்டுக்கு என்று அங்கு அனுப்பப்பட்டு, அவர்களில் 287 நோயாளர்களுக்கு சோதனை நடைபெற்றது.

**இவ்விடயத்தில் உதவுவதற்கு சமூகத்தினர் செய்யக் கூடிய பல விடயங்கள் உள்ளன**
இம்முயற்சியினை நாம் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுமுயற்சியாக மாற்ற வேண்டும். டுறாம் பிரதேசத்தில் கோவிட்-19 பரவுவதை நாம் மிகவும் குறைக்க முடியுமானால், அது எங்கள் எல்லோருக்கும் நன்மை தருவதாக அமையும். ஆரோக்கியமாக இருப்பதற்கு உங்கள் கைகளைக் கிரமமாகக் கழுவுவதுடன் அற்ககோல் அடங்கிய கைச்சுத்த இரசாயனப் பொருளையும் பயன்படுத்தவும். உங்களை நீங்களே பாதுகாப்பாக வைத்திருங்கள். உங்களுக்குச் சுகவீனம் உள்ளபோது வீட்டிலேயே தங்கி விடுங்கள். இருமும் பொழுதும் தும்மும் பொழுதும் உங்கள் வாய், மூக்கினை கவசம் இட்டு மூடுங்கள். உங்கள் முகத்தைக் கையால் தொடுவதைத் தவிருங்கள். சமூகரீதியாக தூரநின்று பழகுங்கள். கூட்டமாக நிற்பவர்களிடம் இருந்து அகலுங்கள். முடிந்த அளவு வீட்டின் உள்ளே தங்கி விடுங்கள். அமைதியாக இருந்து, உங்களிலும் உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் கூடிப் பணிபுரிவோர் ஆகியோரிலும் கவனம் எடுங்கள். கோவிட்-19 நோய் எங்களுடன் எதிர்வரும் பல மாதங்கள் தொடர்ந்து நிலைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். எனவே அதற்கு ஏற்றவாறு எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

**புதிய தகவலைப் பெற்றுக் கொள்ளுங்கள்**
புதிதான தகவலினைக் கண்டறிவதற்கு [www.lakeridgehealth.on.ca](http://www.lakeridgehealth.on.ca) என்ற இணையத் தளத்தில் [Lakeridge Health's COVID-19 web page](#) என்ற வலையப் பக்கத்தை பார்வையிடுங்கள்.

கடந்த சில வாரங்களாக நீங்கள் எமக்கு வழங்கிய பிரமாண்ட ஆதரவு, அன்பான செயல்கள் ஆகியவற்றுக்கு மீண்டும் நன்றி கூறுகிறோம். லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பில் உள்ள உங்கள் நண்பர்கள் எல்லோருக்கும் அது உற்சாகம் ஊட்டுவதாக உள்ளது.





சூசன் டிறிக் / Susan deRyk
இடைக்கால தலைவர் மற்றும் CEO
Interim President and CEO

கலாநிதி ரோனி ஸ்ரோன் / Dr. Tony Stone
பணியாளர் குழுத் தலைவர்
Chief of Staff